பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

20.08.2025 WEDNESDAY 7 15 AM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உலக நாடுகளின் உற்ற நண்பனாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மத்திய அரசின் ஜன் விஸ்வாஷ் திருத்தச் சட்ட மசோதா, தொழில் தொடங்குவதை எளிதாக்கும் நடைமுறைக்கு கூடுதல் வலுசேர்க்கும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

3. சூரியசக்தி மின்உற்பத்தியில் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. மாணவர்களிடையே தேசப்பற்றை ஊக்குவிக்கும் விதமாக 3ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை ஆப்பரேஷன் சிந்தூர் பற்றிய பாடத்தை NCERT அறிமுகப்படுத்தியுள்ளது.

5. அமெரிக்கப் படைகள் யுக்ரைனுக்கு அனுப்பப்படமாட்டாது என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

**>>>>><<<<<**

உலக நாடுகளின் உற்ற நண்பனாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவுப் பணி பயிற்சி அதிகாரிகளிடையே பேசிய அவர், உலகின் எந்த நாட்டிற்கும் அவசரத் தேவை ஏற்படும்போது முதலில் உதவும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வருங்காலத்தில் இந்தியாவிற்கான தூதர்களாக பணியாற்றவிருக்கும் வெளியுறவுத்துறை அதிகாரிகள், 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கான அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வெளிநாட்டு இளைஞர்களிடம் இந்தியா மீது ஆர்வத்தை ஏற்படுத்த, இளம் அதிகாரிகள் பாடுபட வேண்டும் என்றும் பிரதமர் அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

ரஷ்யா சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், மாஸ்கோவில் இன்று இந்தியா-ரஷ்யா இடையேயான வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் கலாச்சார ஒத்துழைப்புக்கான ஆணையத்தின் 26வது கூட்டத்தில் பங்கேற்கிறார்.

மாஸ்கோவில் நடைபெறும் நடைபெறும் இந்தியா – ரஷ்யா தொழில் கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொள்கிறார்.

தமது இந்தப் பயணத்தின் போது, ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெர்ஸி லாராவுடன், இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் பல்வேறு பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் திரு. ஜெய்சங்கர் விரிவான பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சரின் இந்தப் பயணம் இந்தியா – ரஷ்யா இடையேயான நீடித்த நட்புறவை மேலும் வலுப்படுத்துவதாக அமையும் என்று வெளியுறவு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

மோட்டார் வாகன உற்பத்தி துறையில், அடுத்த ஐந்தாண்டுகளில் இந்தியா உலகின் முதல் நாடாக உருவெடுக்கும் என்று மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இதுதொடர்பான ஆய்வறிக்கையை வெளியிட்டுப் பேசிய அவர், நாட்டின் மோட்டார் வாகன தொழில்துறை ஆண்டுக்கு 14 சதவீத அளவிற்கு வளர்ச்சியடைந்து வருவதாக கூறினார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்படும் விரைவுச்சாலை மற்றும் சுரங்கப்பாதைகள் காரணமாக, போக்குவரத்து இணைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதுடன், சரக்கு போக்குவரத்து செலவும், பயண நேரமும் வெகுவாக குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வருங்காலத்தில் பசுமை எரிபொருளை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய திரு. நிதின் கட்கரி, இதனை கருத்தில் கொண்டு, மின்சார வாகனங்கள் மற்றும் பேட்டரி உற்பத்தியில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

மத்திய அரசின் ஜன் விஸ்வாஷ் திருத்தச் சட்ட மசோதா, மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தி, தொழில் தொடங்குவதை எளிதாக்கும் நடைமுறைக்கு கூடுதல் வலுசேர்க்கும் என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று இந்த மசோதாவை தாக்கல் செய்த அவர், இதுகுறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்வதற்காக இதனை தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டார்.

சிறிய பிரச்சினைகளுக்கு நீதிமன்றங்களுக்கு வெளியே தீர்வு காணவும். நீதிமன்ற வழக்கு சுமையை குறைக்கும் வகையில், அபராதம் விதிக்கும் அதிகாரத்தை நிர்வாகமே மேற்கொள்ளவும் இந்த திருத்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>><<<<<

சூரியசக்தி மின்உற்பத்தியில் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பருவநிலை மாற்றம் குறித்த பாரிஸ் உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள இலக்குகளை, 5 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியா எட்டியிருப்பதுடன், சூரியசக்தி மின்உற்பத்தி இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் மொத்த மின்சார உற்பத்தியில், 50 சதவீதத்திற்கும் அதிகமாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் கிடைப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2030ஆம் ஆண்டுக்குள் தூய்மையான எரிசக்தி உற்பத்தியை 500 ஜிகாவாட்டாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மக்களவையில், அரசியல் சாசனத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள அனைத்து மொழிகளிலும், மொழிபெயர்ப்பு செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று இதனை தெரிவித்த அவர், ஏற்கனவே இந்தி, ஆங்கிலம் தவிர்த்து 18 மொழிகளில் இந்த வசதி வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது கஷ்மீரி, கொங்கனி மற்றும் சந்தாலி மொழிகளிலும், மொழிபெயர்ப்பு வசதி செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக போட்டியிடும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று தமது வேட்புமனுவை தாக்கல் செய்கிறார்.

தேர்தல் அதிகாரியான மாநிலங்களவை செயலாளரிடம் அவர் மனுதாக்கல் செய்யவுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில் போட்டியிடும் திரு. சுதர்ஸன் ரெட்டி, நாளை மனுதாக்கல் செய்யவுள்ளார்.

இந்த தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளையுடன் நிறைவடைகிறது.

நாளை மறுநாள் வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை மேற்கொள்ளப்படும். மனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 25ஆம் தேதி கடைசி நாளாகும்.

அடுத்த மாதம் 9ஆம் தேதி தேர்தல் நடைபெறும்.

நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்கள் இத்தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் ஆவர்.

>>>>><<<<<

அரசு ஊழியர்கள், ஓய்வுபெற்ற பிறகும் அவர்களது திறமை மற்றும் பணி அனுபவம் காரணமாக தேச நிர்மானப் பணியில் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில், ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கான 8வது தேசிய அனுபவ் விருதுகளை வழங்கிப் பேசிய அவர், ஓய்வுபெற்ற ஊழியர்களின் அனுபவம், புதிதாக பணியில் சேருபவர்களுக்கு வழிகாட்டுவதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இந்த விருதுகள், ஓய்வுபெற்ற அலுவலர்களை கௌரவிப்பதாக மட்டுமின்றி, ஆட்சி நிர்வாகத்தில் அவர்களது அனுபவங்களை நினைவுகூருவதாகவும் அமையும் என்று திரு. ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

மாணவர்களிடையே தேசப்பற்றை ஊக்குவித்து, தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் வல்லமை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக, 3ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை ஆப்பரேஷன் சிந்தூர் பற்றிய பாடத்தை NCERT அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தப் பாடங்கள், மாணவர்கள் நாட்டின் பாதுகாப்பு மற்றும் உலக அளவில் இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்து வருவது குறித்து அறிந்து கொள்ளவும் வகை செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல், பாகிஸ்தான் ராணுவம் மற்றும் ஆட்சியாளர்களால் தூண்டிவிடப்பட்டது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மும்பையில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக, நடுவழியில் நின்ற மோனோ ரயிலில் சிக்கித் தவித்த 582 பயணிகள், தீயணைப்புத் துறையினரால் மீட்கப்பட்டனர்.

மும்பை மைசூர் காலனி - பக்திபார்க் ரயில் நிலையங்களுக்கு இடையே சென்று கொண்டிருந்த இந்த மோனோ ரயில், தொழில்நுட்ப கோளாறு காரணமாக மாலை 6 மணியளவில் நின்றுவிட்டதாக மும்பை மெட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

உடனடியாக தீயணைப்பு துறையினர் மற்றும் பிற குழுவினர் அனுப்பப்பட்டு, ராட்சக ஏணிகள் வாயிலாக பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டதாக அந்த நிறுவனம் கூறியுள்ளது.

மீட்கப்பட்ட பயணிகளுக்கு முதலுதவி சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

ரஷ்யாவுடனான போரை நிறுத்துவதற்காக, அமெரிக்கப் படைகள் யுக்ரைனுக்கு அனுப்பப்படமாட்டாது என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், நேட்டோ அமைப்பில் யுக்ரைன் இணைவதும், ரஷ்யா கைப்பற்றிய க்ரிமியா பகுதியை திரும்பப் பெறுவதும் சாத்தியமற்றது என்று தெரிவித்துள்ளார்.

யுக்ரைனின் பாதுகாப்புக்கு உத்திரவாதம் அளிக்கும்படி, அந்நாட்டு அதிபர் திரு. ஜெலன்ஸ்கி விடுத்துள்ள கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யா – யுக்ரைன் போர் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்படும் என்றும் திரு. டோனல்ட் டரம்ப் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>><<<<<

பங்களாதேஷ் நாடாளுமன்ற தேர்தலில், விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை செயல்படுத்த பங்களாதேஷ் தேசியக் கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

டாக்காவில் செய்தியாளர்களிடம் பேசிய பங்களாதேஷ் தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் திரு. மிர்ஸா ஃபக்ருல், பிரதிநிதித்துவ முறை, ஜனநாயக உரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வாய்ப்பில்லை என்று கூறினார்.

அதேவேளையில், ஜமாத்தே இஸ்லாமி உள்ளிட்ட சில கட்சிகள், வரவிருக்கும் பொதுத்தேர்தலில் பிரதிநிதித்துவ முறையை அமல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

>>>>><<<<<

ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியாவுக்கு மேலும் மூன்று பதக்கங்கள் கிடைத்துள்ளன.

கஸகஸ்தானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 மீட்டர் ஏர்பிஸ்டல் மகளிர் பிரிவில் இந்தியாவின் Kanak Budhwar தங்கப்பதக்கம் வென்றார்.

இதே பிரிவில் Agam Grewal வெள்ளிப்பதக்கம் வென்றார்.

Kanak Budhwar, Agam Grewal மற்றும் Gamberya ஆகியோர் குழுப் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 7 பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>><<<<<

17 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய மகளிர் கால்பந்துப் போட்டியில், இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில், இன்று நேபாள அணியை எதிர்கொள்கிறது. இப்போட்டி திம்புவில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

>>>>>END<<<<<